யாழ்ப்பாணம்

# "சர்வகட்சிமாநாட்டிஞல் எதுவித பயனுமில்லை"

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 03 இதழ் 64
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15 — 04 — 1992

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

[கொழும்பு]
இலங்கை இனப்பிரச்னை, மற்றும் பல பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் அரசிஞல் நடத்தப்பட்டு வந்த சர்வகட்சி மாநாட்டிஞல் எதுவித பயனும் ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் போட்டியிடுமாறு ஜஞதிபதி 'பிரே'மாவிற்கு சிறிமாவோ சவால்!

(கொழும்பு)
ஜஞதிபதி பிரேமதாசா தமது பதவியிலிருந்து ராஜிஞமாச் செய்து புதிதாக ஜஞதிபதி தேர்தலை நடத்தி தன்னுடன் போட்டியிடுமாறு எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சவால் விடுத்துள்ளார்.

ஜஞதிபதி தேர்தல் நடத்துவது தொடர்பாக அரசியலமைப்பில் திருத்தம்கொண்டு வந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பு வழங்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார். [மா]

# புலிகளின் தீரமிகு தாக்குதல்களிஞல் பாரிய இராணுவ நடவடிக்கை கிழக்கில் தடைப்பட்டுவருகிறது

(மட்டுநகர்)
**கிழக்கு மாகாணத்தில் பெரும் எடுப்புடன் அண்மையில் முடுக்கி விடப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை விடுதலைப்புலிகளின் தீரமிகு தாக்குதல்களிஞல் தடைப்பட்டு நிற்கின்றன.**

கடந்த வாரம் கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதல்களை மேற்கொள்வதற்கென வடபகுதியிலிருந்து பெருமளவு படைகளைக் கொண்ட இரு படையணிகள் கொண்டு வரப்பட்டதுடன் பாரிய இராணுவ தளபாடங்களும் குவிக்கப்பட்டன.

இந்த ராணுவ நடவடிக்

[4-ம் பக்கம் பார்க்க]

## தளபதிகள் இடமாற்றம் எதனையும் சாதித்துவிடாது

[கொழும்பு]
இராணுவத் தளபதிகளின் இடமாற்றத்தின் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக பலவிதமான இராணுவ நடவடிக்கைகள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டபோதும், அவை புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. இந்நிலையில் இராணுவத்தளபதிகளை இடம் மாற்றுவதால் புலிகளை முறி

[4-ம் பக்கம் பார்க்க]

## பிக்குகள் யாழ் வருகை ஒத்திவைக்கப்படலாம்

[யாழ்ப்பாணம்]
யாழ் நகருக்கு இம்மாதம் 18-ம் திகதி வருவதாக தெரிவிக்கப்படும் பௌத்த பிக்குகள் குழுவினர் குறித்த திகதிக்கு யாழ். வருவார்

4ம் பக்கம் பார்க்க]

## உடுகம்பொல மீது தடுப்புக்காவல் உத்தரவு

[கொழும்பு]
முன்னுள் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல மீது பாதுகாப்பு அமைச்சு வெகுவிரைவில் தடுப்புக்காவல் உத்தரவுபிறப்பிக்க விருப்பதாகக் கூறப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## உடுகம்பொலவைத் தேடி பல இடங்களில் வேட்டை

[கொழும்பு]
முன்னுள் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல கொழும்பு மாநகரில் இருப்பதாக குற்ற புலஞய்வு பிரிவினர் நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது. விசேடகுற்ற

[4ம் பக்கம் பார்க்க]

## படையினர் சுட்டு ஒருவர் பலி; ஐவர் காயம்

[மட்டுநகர்]
மட்டக்களப்பு ஊறணிப் பகுதியில் இராணுவத்தினரால் தமிழர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஐவர் காயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை இப்

(4-ம் பக்கம் பார்க்க)

## பியகம வீதி விபத்தில் 10 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
**பியகம பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒன்பது பெண்கள் உட்பட 10 பேர் பலியாகினர்.**

திருமண வீடொன்றுக்கு பேருவளைக்கு சென்றுவிட்டு தனியார் வான் ஒன்றில்திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த வான் மற்ரெரு வானுடன் மோதியபோது 10பயணிகள் கொல்லப்பட்டனர்.

இரு வான்களிலும் பயணம் செய்தவர்களில் 20 பேர் படுகாயமடைந்தனர். (சி)

## தி.மு.க.வை தடைசெய்யுமாறு மத்திய அரசிடம் கோரிக்கை

(சென்னை)
தி. மு. க.வை தடை செய்யுமாறு அ. தி. மு. க. சட்டசபை, லோக் சபா உறுப்பினர்கள் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை ராஜீவ் கொலை குறித்து தி. மு. க. உறுப்பினர் வை. கோபாலசாமியை விசேடபுலஞய்வு பிரிவினர் விசாரிக்கவேண்டுமெனதமிழக முதல்வர் ஜெயலலிதா கேட்டுள்ளார்,

பட்டாளி மக்கள் கட்சியின் நடவடிக்கை குறித்தும் மத்திய அரசிற்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

## "வடபகுதியில் தொல்லைகளை அனுபவித்து வருகிறேம்"

### ராணுவ சிப்பாய் தகவல்

(கொழும்பு)
"இங்கு போர்முனையில் நிற்கும் நாம் தினமும் தொல்லைகளை அனுபவிக்கிறேம்" என்று பலாலி இராணுவ பாதுகாப்பு அரண்களில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொழும்பு பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இம்முகாமிற்கு விஜயம் செய்த பத்திரிகையாளர் பாதுகாப்பு அரணில் நிற்கும் இராணுவத்தினருடன் உரையாடினர்கள்

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாம் இங்கு சுகபோகங்களுடன் வாழ்க்கை நடத்துவதாகப்பலர் எண்ணுகின்றனர். ஆஞல் நாம் அனுபவிக்கும் தொல்லைகளை நாமே அறிவோம். ஆனையிறவு முகாமிற்கு இங்கிருந்து தான் நாம் குடிநீரை அனுப்பி வைக்கிறேம் என்றும் கூறினர். (ரி)

## காணுமல் போனவர்கள் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

(கொழும்பு)
இராணுவ நடவடிக்கை, வன்முறை சம்பவங்களிஞல் இலங்கையில் இதுவரை காணுமல் போனவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இதுசம்பந்தமான சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக கூறப்படுகின்றது.

மேற்படி சம்பவங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் இது வரை காணுமல் போனவர்களின் விபரங்களை விரைவில்

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலை

புத்தம் புதிய அழகிய டிசைன்களில் பிறந்தநாள் வாழ்த்துமடல்கள் விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு 1-ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2078)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள். வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்கள். பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம். 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [சி-6126]

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம் தனிப்பட்ட முறையில் பல வருடம் அனுபவம்பெற்ற ஆசிரியரால் சிறப்பாகக் கற்பிக்கப்படும். ஏராளமான பயிற்சிகளும் [20 வருட வினுத்தாள் உட்பட] செய்யப்படும். R.பாலசுப்பிரமணியம் F. Sc Dip. in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-6161)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 (1991) புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 18-04-92 சனி, 23-04-92 வியாழன் மு. ப. 7-00, மு.ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். ஆண்டு 5 [1992] புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 19-04-92 ஞாயிறு மு ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6163]


## மூன்று சில்லு சைக்கிள்கள்

[யாழ்ப்பாணம்]

கால் ஊனமுற்றோருக்கு வழங்குவதற்காக 40 மூன்று சில்லுச் சைக்கிள் வண்டிகள் யாழ். சமூக சேவைத் திணைக்களத்துக்கு கப்பல் மூலம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [சு]

## ரதோற்சவம்

(பருத்தித்துறை)

அல்வாய் அருள்மிகு சாமணந்தறை ஆலடி விநாயகராலய ரதோற்சவம் நாளை 16ம் திகதியும் தீர்த்தோற்சவம் 17ம் திகதியும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

0 0 0

(பண்டத்தரிப்பு)

யாழ்.மாவட்டத்தில் காவடிகளுக்கு பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான மாதகல் நுணசைமுருகமூர்த்திகோவில் வருடாந்தரதோற்சவம்இன்று 15ம் திகதிபுதன்கிழமை நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை 16ம் திகதி வியாழக்கிழமையன்று நடைபெறவுள்ளது. (72)

## யாழ். மாவட்ட நிலப் பயன்பாடு பற்றிய மதிப்பீடு தயாரிப்பதில் முயற்சி

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணமாவட்டத்தின் நிலப்பயன்பாடு பற்றிய மதிப்பீடு ஒன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்பீடமும் யாழ்ப்பாணம் செயலகமும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

இந்த மதிப்பீட்டு வேலை முதலில் கிராமங்கள்தோறும் கிராமசேவை அலுவலர்களினால் நடத்தப்படும்.

கிராமங்கள்தோறும் காணப்படுகின்ற நிலங்களின் பயன்பாடுகள் பற்றி கிராமசேவையாளர்களினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளையும் அறிக்கைகளையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியற் பீட மாணவர்களும் யாழ்ப்பாணச் செயலகத்தைச் சேர்ந்த அரச அலுவலர்களும் பரிசீலனைசெய்வார்கள். இவர்களது பரிசீலனை அறிக்கையின்படி 1992-1993ஆம் ஆண்டுக்கான விவசாயச் செயற் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

இந்த மதிப்பீடுகளை நடத்தவுள்ள கிராமசேவை அலுவலர்களுக்கான நிலப்பயன்பாடு பற்றிய கருத்தரங்கு ஒன்று வெகுவிரைவில் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியில் நடத்தப்படவுள்ளதாக சுற்று நிருபம் ஒன்றின்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (139)

## விசேட சித்தி

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. (சா/த] 1991 பரீட்சையில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இரு மாணவர்கள் ஆறுபாடங்களில் அதிவிசேட சித்தியும், இரு மாணவர்கள் ஐந்து பாடங்களில் அதிவிசேட சித்தியும் பெற்றுள்ளனர்.

## யாழ்ப்பாண மாவட்டத்தில் மரக்கறி பயிர்செய்கை நன்குவிருத்தியடைந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

மரக்கறிப் பயிர்ச்செய்கை யாழ்ப்பாண மாவட்டத்தில் நன்கு விருத்தியடைந்துள்ளது. பல்லின மரக்கறிகள் உற்பத்தியாகின்றன. இவற்றினது உற்பத்தி பலமடங்கு பெருகியது. இதனால் விலையில பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பருவகால நிரம்பலும், பழுதடையக்கூடிய நிலையும், பதப்படுத்தல் தொழில் முயற்சிகள் இல்லாமையுமே இத்தகைய பாரிய வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளன,

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. நந்தகுமாரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ''தற்போது பனை பிரதான வளமாகக் கருதப்படுகிறது. இதில் பலரது கவனமும் திரும்பியுள்ளது. பல ஆய்வுகள் இடம்பெறுகின்றன. இந்த வளத்தை முழுமையாகப் பயன்படுத்தாமல் இருப்பது கவலைக்குரியது.

பனை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இயற்கை வழங்கிய கொடை எனலாம். மற்றது முந்திரிகை.தென்னை போன்ற பயிர்களில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது அவரை இனத் தாவரங்களின் உற்பத்தி குறிப்பாக பயறு, உழுந்து, கௌபி, துவரை ஆகியவற்றின் உற்பத்தி யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ளது. இவற்றினை தரம்பிரித்து பொதிசெய்தல், மாவாக்கிப் பொதிசெய்தல் போன்ற சிறு தொழில்களை ஆரம்பிக்கலாம்.

அதிக உற்பத்தியாகும் மரக்கறி வகைகளில் சில வற்றை உலரவைத்து பொதி செய்வது சாத்தியமாகும். வேறு சில வற்றை உப்பு நீரில் காற்றுப் புகாத வகையில் போத்தலில் அல்லது தகரத்திலோ அடைக்கலாம். முருங்கை போஞ்சி போன்ற வற்றை விணாகிரியில் ஊற வைத்து, அச்சாறு, எலுமிச்சச்சாறில் ஊறவிட்டு ஊறுகாய், சட்னி என பல்வேறு பதப்படுத்தப்பட்ட பொருட்களாக மாற்றியமைக்கலாம்.

பழப்பயிர் என எடுத்துக் கொண்டால், சாறுகளை சேகரித்து பழப்பாகு, பழரசம், பழப்பானம் ஆகியவை தயாரிக்கலாம். (சு)

## கிழக்கில் அகதிமுகாமிலுள்ள தமிழர் இராணுவத்தினரால் கைது!

[மட்டுநகர்]

கிழக்கு மாகாணத்தில் அகதி முகாம்களில் வாழும் தமிழர்கள் பலர் இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணத்தில் முடுக்கிவிடப்பட்ட தீவிர இராணுவ நடவடிக்கையையடுத்து திருமலை. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்த பல தமிழர்கள் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டுக் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருகிறார்கள்.

இம்மாகாணத்தில் பெரியளவிலான படைகள் குவிக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

இதேவேளை மூதூர், புனானைப் பகுதிகளில் புலிகள் நடத்திய தாக்குதல்களில் மேலும் பல இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியின் பிரிவு மட்டங்களிலும், மாவட்ட மட்டத்திலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று 15-ம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு கோண்டாவில் போக்குவரத்துச் சபை சாலை முன்பாகவுள்ள கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவின் போது வழங்கப்படவுள்ளன.

## 'செஞ்சிலுவைச் சங்கம் ஹோமியோபதி மருந்துகளை பெற்றுத்தர வேண்டும்'

(பண்டத்தரிப்பு)

ஹோமியோபதி வைத்தியர்கள் ஹோமியோபதி மருந்துவகைகளைப் பெறுவதில் அனுபவித்துவரும் கஷ்டங்களை நீக்கும் முகமாக இந்தியாவிலிருந்து ஹோமியோபதி மருந்துகளைத் தருவித்துச் சங்க மூலம் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் உதவவேண்டும்,''

இவ்வாறு கோருகின்ற முக்கிய தீர்மானம் ஒன்று அண்மையில் யாழ். நகரில் நடைபெற்ற வட-இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 33-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் யாழ். நாவலர் வீதியிலிலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 237-வது பிறந்த நாள் ஞாபகார்த்த விழாவும் கொண்டாடப்பட்டது.

சங்க உறுப்பினர்களுக்காக வைத்தியம் சம்பந்தமான நூல் நிலையமொன்றைச் சங்கப் பணிமனையில் ஆரம்பிப்பது என்ற தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. (72)

## புதிய விக்கிரகம்

[வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மூன்றும் பனை வைரவர் கோவிலுக்கெனச் சுமார் முப்பதாயிரம் ரூபா செலவில் புதிய விக்கிரகம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்த அழகுமிகு விக்கிரகம் வெகுவிரைவில் முத்தமிழ் குருமணி நா. சர்வேஸ்வரக் குருக்களால் பிரதிஷ்டை செய்து வைக்கப்படவிருக்கிறது.

இவ்விழாவுக்கான ஒழுங்குகளை பரிபாலன சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பில் மழை

[கொழும்பு]

கடந்த 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் மழை பெய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [59]

## அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி 2ம் சுற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர் நடாத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 2ம் கட்ட ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகிறது.

சுன்னாகம்ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் போட்டிகளில் இன்றைய ஆட்டத்தில் மாதகல் சென்தோமஸ் கழகத்தை எதிர்த்து கலைவாணிக் கழகம் மோதும்.

வடமராட்சிப் பகுதியில், நெல்லியடி மத்தியமகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் சுடரொளி கழகத்தை எதிர்த்து . திக்கம் இளைஞர் அணி மோதும்.

யாழ், மாவட்டத்திலிருந்து 40க்கும் மேற்பட்ட விளையாட்டுக்கழகங்கள் ஒரு உதைபந்தாட்டச் சுற்றப் போட்டியில் கலந்துகொண்டுள்ளது இதுவே முதற்தடவை. இதுவரைகாலமும், இலைமறைகாய்போல் இருந்த பல விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியின் மூலம் பிரபல்யமடைந்துவருவது குறிப்பிடத்தக்கது என்று இப்போட்டியின் பிரதி அமைப்பாளர் திரு. முருகநேசன் தெரிவித்தார். [வி]


## சுவிசேஷ ஆராதனைகள்

பாவத்திலும், சாபத்திலும், குடியிலும், பிசாகின் பிடியிலும், வியாதியிலும், உங்களது பிரச்சனைகள், யாவற்றிலுமிருந்து இயேசு உங்கள் யாவரையும் விடுவிக்க வல்லவராக இருக்கிறார்.

உங்களுக்காக ஜெபிக்கப்படும்.

இடம்:- இலங்கை பெந்தெகொஸ்தே சபை சாலை 111, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

காலம்:- 1992 ஏப்ரல் 16-ந் திகதி வியாழன் முதல் 19-ம் திகதி ஞாயிறு வரைக்கும்.

நேரம்:- தினமும் மாலை 4-00 மணிக்கு.

யாவரையும் அன்பாய் அழைக்கிறோம்.

இலவச உட்பிரவேசம். (சி-6164)

## சண்முக ஆயுள்வேத வைத்தியசாலை

(டாக்டர் கே. குப்புசாமி)

சிவன்பண்ணைவீதி, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

புத்தாண்டு (13-4-92) தொடக்கம் மீண்டும் இயங்குகிறது.

குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணை, கோரோசனை, கஸ்தூரி, முக்கூட்டுமாத்திரை மற்றும் சகல வித ரோகங்களுக்கும் சிகிச்சையளிக்கப்படும்.

(ஏ-2080)

## யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற (பிரதேச சபை) இலவச சித்த ஆயுர்வேத மருந்துக்கலவையாளர் சங்கக் கூட்டம்

காலம்:- 17-ம் திகதி (17-04-1992) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி

இடம்:- யாழ். மாநகர இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை (யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில்)

புதிய சம்பளத் திட்டம் பற்றி கலந்துரையாட இருப்பதால் சகல மருந்துக்கலவையாளர்களையும் அன்றைய தினம் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வ. பத்மநாதன், இ. சற்குருநாதன்
(அமைப்பாளர்கள்)

(ஏ-2081)

# ★திருமலை மாவட்டத்தில் மேலதிக அடையாள அட்டை ராணுவத்தினரால் விநியோகம்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு மேலதிக அடையாள அட்டை இராணுவத்தினரால் விநியோகிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் வசிப்பவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் மேலதிகமாக திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதியினால் விநியோகிக்கப்பட்ட அட்டையுடனேயே திருகோணமலை மாவட்டத்தில் வசிக்கவேண்டும் என்றும் இந்தவிசேட அடையாள அட்டையின்றிஎவரும்இந்தமாவட்டத்தில் வசிக்கமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையோடு ஒத்ததாக இருக்கும் இந்த அடையாள அட்டையைத் தமிழர்கள் பெற்றுக்கொள்வது மிகுந்த சிரமமாகும்.

இந்த அடையாள அட்டையில் தேசிய அடையாள அட்டையில் இல்லாத விபரம் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அடையாள அட்டைக்குரியவர்கள் உயரமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட விசேட அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு தமிழராக இருந்தால் பெரும் சிரமத்தின் மத்தியில் பல தடவைகள் இராணுவ முகாமிற்குச் சென்று முகமூடிகளின் முன் நிறுத்தப்பட்டபின்தான் அடையாள அட்டை விநியோகிக்கப்படுவதாக திருகோணமலையில் இருந்துவந்த ஒருவர் தெரிவித்துள்ளார். (137)

## இரவு நேரங்களில் பீதியுடன் வாழும் மக்கள்

(திருகோணமலை)

திருகோணமலை நகரங்களில் வசிப்பவர்கள் இரவு நேரங்களில் பெரும் பீதியுடன் வாழ்ந்துவருகின்றனர்.

இரவு நேரங்களில் திருகோணமலை நகர வீதிகளில் காணப்படும் வெள்ளை நிற வாகனத்தில் வருபவர்கள் நகர வீதிகளில் உள்ள தமிழ் மக்களின் வீடுகள்மீது இரவு நேரங்களில் உட்புகுந்து வீடுகளில் உள்ளவர்களை விசாரணை செய்வதனால் நகரங்களில் வசிக்கும் மக்கள் பெரும் பீதியுடனும் பதற்றத்துடனும் வாழ்ந்துவருகின்றனர். (137)

## இடமாற்றசபை

(யாழ்ப்பாணம்]

பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்ற சபை பண்டத்தரிப்பு கோட்டத்தில் 16ம் திகதியும் சாவகச்சேரி கோட்டத்தில் 19ம் திகதியும், பருத்தித்துறைக்கோட்டத்தில் 20ம் திகதியும். வேலணை, யாழ்ப்பாணக் கோட்டத்தில் 21ம் திகதி காலை 9 மணியளவில் கூட உள்ளது. [சு]

## 3 ம் ஆண்டு மாணவருக்கு ஆங்கிலம்

(உடுவில்]

இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போது மூன்றும் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு ஆங்கில பாடம் போதிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாடத்துக்கான பாடநூல்கள் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 645 குடும்பங்களுக்கு துணிகள் விநியோகம்

(புலோலி)

வெற்றிலைக்கேணி-கட்டைக்காடு இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த செம்பியன்பற்று, நாகர்கோவில் பகுதிகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்குச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உடுதுணிகளை வழங்கியது.

645 குடும்பங்களுக்கு இந்த உடுதுணிகள் வழங்கப்பட்டன.

இக்குடும்பங்களுக்கு ஏற்கனவே சமையல் பாத்திரங்களும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

இக்குடும்பங்கள் யாவும் செம்பியன்பற்று - நாகர்கோவில் பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைத்து வழங்கப்பட்ட தற்காலிகக் குடிசைகளில் வசித்துவருகின்றன. (மா)

## ஆலோசனை கூட்டம்

[உடுவில்]

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உடுவில் உபநிலையத்தில் இயங்கிவரும் பொதுநூலகம், நூலக சேவையை திறம்பட நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்நூலகசேவை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் 18ம் திகதி காலை 10 மணிக்கு மேற்படி நூலக மண்டபத்தில் நடைபெறும். [109]

## ஆகஸ்ட்டில் தமிழகத்தில் உலக திருக்குறள் மாநாடு

(சென்னை)

உலகத் திருக்குறள் மாநாடு இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் தமிழ்நாட்டில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

சென்னை வசந்த மகாலில் ஆகஸ்ட் 7ம், 8ம், 9ம் திகதிகளில் இம்மாநாடு நடைபெறவுள்ளதாக உலகத்தமிழ் மறைக் கழகத்தின் தலைவரும் தலைமை அமைப்பாளருமான திரு. கா. பொ. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டிற்கு பல்வேறு நாடுகளிலுமிருந்து பெருமளவு அறிஞர்கள் தமிழகம் வரவுள்ளனர். (சி)

## தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை இளையதம்பி வித்தியாலய தமிழ்த்தின விழாவின் போது வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

வித்தியாலய அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெற்ற விழாவில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

## வீட்டில் திருட்டு

[வவுனியா]

வவுனியா காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் ஒருவர் அண்மையில் விடுமுறைக்காக புன்னாலைக்கட்டுவனிலுள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்றபோது தனது வீட்டில் பல பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவித்தார். [59]

## இராசிபலன்

**15/04/1992**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு சித்திரை 03)**

திரயோதசி மாலை4.04வரை உத்தரம் மாலை 5.38வரை, இராகுகாலம் பகல் 12.15 முதல் 1.45 வரை, சுபநேரம் மாலை 4.45 முதல் 6.25 வரை.

மேடம்: வெகுஜன மதிப்பு பணவரவு, புகழ்.

இடபம்: காரியதாமதம், குடும்பபகை வெறுப்பு.

மிதுனம்: தொழில் கஸ்டம் அலைச்சல் செலவு.

கடகம்: இல்லச்சிறப்பு, பொதுத்துறைஈடுபாடு, பாராட்டு.

சிங்கம். ஏமாற்றம் வைத்தியசெலவு, யோசனை.

கன்னி: தற்பெருமை தொழில்லாபம். பணவரவு.

துலாம்: வாக்குவாதம் பகைவர்தன்பம், காரியதடை

விருச்சிகம்: கௌரவம், புதிய உறவு, விவேகம்.

தனுசு. தொழில் சிறப்பு, இனசனவரவு, தானதர்மம்.

மகரம்: வாக்குவன்மை, சகோதரபகை, கடன்சுமை.

கும்பம்: கடும்சினம்குடும்ப பிரிவு, பதட்டம்.

மீனம்: சுபகாரிய செலவு, அவசரபயணம் எதிர்பாராத உதவி.

— ஜோஸ்யர்.

## நமது சமூகத்தின் மத்தியில் குறைபாடுகள் இருக்கக்கூடாது

(யாழ்ப்பாணம்)

சுதந்திரத்திற்காகபோராடுகின்ற நமது சமூகத்தின் மத்தியில் சமூக சீர்கேடுகள் குறைபாடுகள் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்று தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. ப. நடேசன் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களுக்காக தடுத்துவைக்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள், அவர்களின் பெற்றோர் மத்தியில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: நாங்கள் நிம்மதியாக வாழவேண்டுமானல் எங்கள் சுதந்திரத்தை வென்றெடுக்கவேண்டும்.

நாம் சுதந்திரமடைகின்றபோது சமூகசீர்கேடுகள், சமூக குற்றங்கள் எம்மத்தியில் இருக்கக் கூடாது.

கொடிய எதிரியான சிங்கள அரசு எம்மை எந்த வழியில் தடுக்கலாம் என்பதிலே கருத்தாக இருக்கிறது. இதற்காக விடுதலைக்கு எதிரான சக்திகளை எமது மண்ணிலும் அதுஊடுருவச் செய்யும். இதனல் நாம் விழிப்புடனே இருக்கவேண்டும்'' என்றும் கூறினர். (ரி)

## குடும்ப அட்டை பதிவு வேலைகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் 'குடும்பஅட்டை பதிவு' வேலைகள் நடைபெற்று வருகின்றன. இம்மாதம் 17ம் திகதிக்குமுன் இவ்வேலைகள் பூர்த்தியாகும். (52)

## கோழிகளுக்குத் தடுப்பூசி

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி மாவட்டத்தில் ''ரெனிக்கட்'' நோய் பரவுவதைத் தடுக்குமுகமாக கோழிகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

திருநகர், கணேசபுரம், வட்டக்கச்சி, திருவையாறு, பெரியகுளம், இராமநாதபுரம், அம்பாள் நகர் ஆகிய பகுதிகளில் தடுப்பூசி போடும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 1600 கோழிகளுக்கும், 409 கோழிக்குஞ்சுகளுக்கும் தடுப்பூசிகள்போடப்பட்டுள்ளன என்று தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## யாழ்.—இளவாலை மீண்டும் மினிபஸ் சேவை

(பண்டத்தரிப்பு)

இளவாலையிலிருந்து யாழ். நகருக்கு 788 இலக்க மினிபஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இளவாலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 20 ரூபாவும், பண்டத்தரிப்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 15 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படுகின்றன. (72)

## அன்னை பூபதி அஞ்சலி நிகழ்ச்சி

(பண்டத்தரிப்பு)

அன்னை பூபதியின் 4-வது வருட நினைவை முன்னிட்டு சங்கானை நிற்சாமம் அம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று முழு நாள் உண்ணாவிரதம் நடைபெற்றது. சொற்பொழிவுகளும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இதில் இடம்பெற்றன.

0 0 0

மாதகலில்

மாதகல் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று அன்னை பூபதியின் நினைவை முன்னிட்டு நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (72)

## பரிசளிப்புவிழா

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. ஏ. யோசுவா தலைமையில் நடைபெற்றது, யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா, சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார். (52)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

''போஷாக்கின்மையும், அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகள்'' சம்பந்தமானகருத்தரங்கு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நாளை 16ம் திகதி காலை 9 மணிக்கு இடம் பெறும். (சு)

## தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மருந்துத்தட்டுப்பாடு நிலவிவருவதால் நோயாளர்கள் பெரும் சிரமம் அடைந்துவருகின்றனர்.(154)

## தேனீ வளர்ப்பு ஊக்குவிப்பு

(உடுவில்)

தேனீ வளர்ப்புக்குத் தேவையான பல்வேறு உதவிகளையும் வழங்கவும், தேனீ வளர்ப்போரை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை யாழ்ப்பாண மாவட்ட விவசாய திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக தேவைகள், உதவிகள் குறித்து தம்முடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (109)

## தவறணை தீக்கிரை

(பளை)

பச்சிலைப்பள்ளி தெ ப.பொ. உ.வி சங்கத்துக்குரிய கள்ளுத் தவறணை ஒன்று தீக்கிரையானது.

இந்தத்தவறணைக்குள் 5000 ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமானது.

இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு டனை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## வடமராட்சியில் 27 வீடுகள்

[பருத்தித்துறை]

யாழ். தேசிய அபிவிருத்தி அதிகாரசபை வடமராட்சிப் பகுதியில் உள்ள வசதிகள் குறைந்த 27 குடும்பங்களுக்கு உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி 27 வீடுகளை அமைத்துவழங்கவுள்ளது.

இவ்வீடுகள் வல்வெட்டித்துறை கரவெட்டி பொலிகண்டி புலோலி, துன்னாலைப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ளன. (52)

## போட்டிகள் நடத்த ஏற்பாடு

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகம், கைவினை, உணவு தயாரித்தல் ஆகிய பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

## இடமாற்றம்

[உடுவில்]

மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் காரியாலய உதவியாளராகக் கடமையாற்றி வந்த திரு. சி. வீரசிங்கம், யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தின் காரியாலய உதவியாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [109]

## உள்ளூர் உணவுப் பொருள்

(கொக்குவில்)

நல்லூர் பல. நோ. கூ. சங்கம் டிசம்பர், ஜனவரி ஆகிய இரண்டு மாதங்களுக்கான மாணவர் உணவு முத்திரைக்கு உள்ளூர் உற்பத்தியான பயறு, பட்டாணிக் கடலை, கௌபி ஆகியனவற்றை வழங்கிவருகின்றன. (135)

## தவக்கால நற்சிந்தனை

யூதாஸ் ஒருமுறைதான் கிறிஸ்துயேசுவைக் காட்டிக் கொடுத்தான். ஆனால் நாமோ...?

எம் மேல் கொண்ட ஒப்பற்ற அன்பினால் சிலுவைச் சாவை ஏற்றார். இதனை நாம் மனத்தில் கொள்வோம். மீட்பின் பலனை உணர்வோம்.

மோ-தார்சிசியஸ்

## தீவகத்தில் படையினரிடம் சிக்கியோர் விபரம் திரட்டு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இடம் பெற்ற ராணுவ நடவடிக்கையால் [காரைநகர் உட்பட) இடம் பெயர முடியாது ராணுவத்தின் பிடிக்குள் சிக்குண்டவர்களின் விபரங்களை இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம்திரட்டி வருகின்றது.

மேற்படி விபரங்களை அவர்களின் உறவினர்களை இல 65, புதிய வீதி அத்தியடி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் பதிவு செய்யுமாறு கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## 50 ஹெலிபர் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

பூநகரி – கல்முனை பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் நேற்று முன்தினம் 50 ஹெலிபர் தாக்குதலை நடத்தினார்கள்.

இதேவேளை கறுக்காய் தீவிலிருந்து பின்வாங்கி ஞானிமடத்தில் நிலைகொண்டுள்ள படையினரும் துப்பாக்கிப் பிரயோகத்தினை நடத்தினார்கள்.

# மூன்று நாட்களாக தாக்குதல் இல்லை

(கொழும்பு]

கடந்த சனிக்கிழமையிலிருந்து மூன்று நாட்களாக வடக்கு கிழக்கு பகுதிகளில் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை என்று கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த மூன்று நாட்களும் குறிக்கப்பட்ட பகுதிகளில் அசாதாரண சூழ்நிலை நிலவியதாக மேற்படி தலைமையகம் அறிவித்துள்ளது. [மா]

## அன்னைபூபதி நினைவுநாள் சிறப்பாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு சிரார்த்த தினம் இம்மாதம் 19–ம் திகதி தமிழீழமெங்கும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் நினைவுச் சொற்பொழிவுகள் உட்பட பல நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இந்நிகழ்வுகளில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுர்கள் உட்படப் பலர் கலந்து கொள்வார்கள்.

இதேவேளை அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நிகழ்ச்சிகள் தற்போது தமிழ்ப் பிரதேசம் எங்கும் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

வீதிகள், சனசமூகநிலையங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் அரச ஸ்தாபனங்கள் உட்பட மற்றும் இடங்களில் அன்னை பூபதியின் திருவுருவப்படங்கள்வைக்கப்பட்டு மலர்கள் தூவியும், மலர்மாலை அணிந்தும் அஞ்சலி செலுத்தப்பட்டுவருகிறது. உண்ணு நோன்புகள், அஞ்சலிக் கூட்டங்கள் கிராமம் தொடக்கம் நகர் வரை இடம்பெற்று வருகின்றன. (56)

## தமிழர்கள் படுகொலை கிழக்கில் அதிகரிப்பு

[மட்டுநகர்]

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கண்டபடி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு இராணுவத்தினர் தமிழர்களை கொலை செய்து வருகின்றனர்

கொல்லப்பட்டவர்களின் அடையாள அட்டைகளை எடுத்துச் சென்று பயங்கரவாதிகள் சொல்லப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### உடுகம்போல மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடுகம்பொல கைது செய்யப்பட்டாலும் அல்லது நீதிமன்றத்தில் ஆஜரானாலும் அல்லது குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஆஜரானாலும் இவர் தடுப்புக்காவலில் வைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

### உடுகம்பொலவைத் தேடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வு பிரிவினர் உடுகம்பொலவை தேடி பல்வேறு இடங்களில் தேடுதல் மேற்கொள்வதாகவும் கூறப்படுகிறது.

உடுகம்பொலவின் சத்தியக் கடுதாசிக்கு ஒப்பமிட்ட சமாதான நீதவானையும் குற்ற புலனாய்வு பிரிவினர் தேடிவருவதாக பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுகிறது. மா)

## 3 லட்சம் வேலைவாய்ப்புகள் வீணாக்கப்பட்டன

[கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்களுக்கான மூன்று லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புக்கள் 1991ம் ஆண்டில் மட்டும் வீணாக்கப்பட்டுள்ளதகாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 266 பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் செயற்பட்டுவந்ததாகவும் 3 லட்சத்து 71 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க பணியகம் மேற்படி நிலையங்களுக்கு அநுமதி வழங்கியதாகவும் ஆனால் அறுபத்தையாயிரம் பேரே மத்திய கிழக்கு நாடுகளிற்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க]

## வளைகுடாவிலிருந்து திரும்பியோர் நஷ்டஈடுபெற மீண்டும் விண்ணப்பிக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

குவைத்-ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வேலைஇழந்துநாடு திரும்பியபின்பு நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்த அனைவரையும் மீண்டும் விண்ணப்பிக்கும்படி, யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கோரியுள்ளார்.

2–8–90க்கும், 2-3-91க்கும் இடையில் குவைத், ஈராக் நாடுகளிலிருந்து வேலையிழந்து நாடு திரும்பி நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்த அனைவரும் அடுத்த மாதம் 20ம் திகதிக்கு பின்பு, யாழ். செயலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் மீண்டும் விண்ணப்பிக்கும் படி கேட்கப்படுகின்றார்கள். (வி-71)

## புலிகளை தடைசெய்ய தீவிரமான ஆலோசனை

[புதுடில்லி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வது குறித்து இந்திய மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நேற்று திருப்பதியில் ஆரம்பமான இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக திருப்பதி புறப்படுமுன் புதுடில்லியில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க)

### சர்வகட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன.

இம்மாநாடு தொடர்ந்து நடைபெறுவதினால் பிரச்னை எதனையும் தீர்த்து வைக்க முடியாது. என்றும் இக்கட்சிகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

1989 செப்ரம்பர் 13-ந் திகதி ஆரம்பமான சர்வகட்சி மாநாடு இதுவரை எந்த பிரச்னைக்கும் இணக்கம் காணவில்லை என்றும் கடந்த இரண்டரை வருடங்களாக நாட்களை கடத்தியதே மிச்சம் என்று தெரிவிக்கப்படுகிறது. [மா)

## அம்பாறை குண்டுவெடிப்பிற்கு கனுவாஞ்சிக்குடி வர்த்தகரின் பஸ் பயன்படுத்தப்பட்டது

(அம்பாறை)

அம்பாறையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கு காரணமாயிருந்த பஸ் களுவாஞ்சிக்குடி வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானது என தெரிய வந்துள்ளதாம்.

வெடிவிபத்து எற்படுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் தான் இந்த பஸ் கல்முனை–அம்பாறை சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்குண்டு வெடிப்பு தொடர்பாக ஒருவர் சரணடைந்துள்ளதாகவும் இவர் சுதந்திரக் கட்சியுடன் தொடர்பு பட்டவரெனவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

### பிக்குகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களா என்பது சந்தேகத்திற்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

வடபகுதிக்கு நல்லெண்ணத் தூதுக்குழுவாக யாரும் வந்து போகலாம் என விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்த போதிலும் அங்கு செல்வதற்கான பௌத்த பிக்குகளின் இறுதி முடிவு பற்றி இன்னும் விடுதலைப் புலிகளுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பிக்குகள் வருகை மேலும் சில மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படலாம் என்று தெரியவருகிறது. (வி]

### காணுமல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிவைக்கும்படி நாட்டிலுள்ள சகல அரச அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக, கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## மரண அறிவித்தல்

### M. P. கணபதிப்பிள்ளை கந்தசாமி

(பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவர்)

பிரான்பற்று உப தபால் அதிபரும், பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவரும், பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயான அபிவிருத்திச் சபைத் தலைவரும், பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அபிவிருத்திச்சபை உப தலைவருமாகிய M. P. கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 13-4-92ல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னுப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரரும், இராசம்மாவின் அன்புக் கணவரும், ஜெயசீலன் (இத்தாலி), ஜெயவதனா (ஆயுள்வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜெகதீசன், சுரேந்திரன், சுமதி, கலிசீசரன், கங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி நல்லையா பரமேஸ்வரி, சந்திரசேகரம், திருமதி கணேசரத்தினம் நாகேஸ்வரி, திருமதி மகாதேவன் மகேஸ்வரி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், திருமதி தேவராசா லிங்கேஸ்வரி, காந்தராசா, பொன்னம்பலம், திருமதி அருச்சுனன் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 13-4-92 மாலை 5-00 மணிக்கு அவரது இல்லத்தில் செய்யப்பட்டு, தகனக்கிரிகை விளாவெளி மயானத்தில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

தகவல்: பங்கிறுஸ். (சி 6162)

## காங்கிரஸ் மத்திய குழுவிலிருந்து விலகப் போவதாக பங்காரப்பா அறிவிப்பு

(புதுடில்லி)

கர்நாடக முதல்வர் எஸ். எஸ். பங்காரப்பா இந்திரா காங்கிரஸ் கட்சியின் மத்திய குழுஉறுப்பினர்பதவியிலிருந்து தாம் விலகப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் கட்சியின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து பதவி வகிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திரா காங்கிரஸ் மத்திய குழுவிற்கு கர்நாடக மாநிலத்திலிருந்து 42 பேர் தெரிவு செய்யப்படுவதாகவும், இவர்களில் 29 பேர் தமக்கு எதிரானவர்கள் என்பதாலேயே தாம் பதவி விலகுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளையில் திரு. பங்காரப்பாவை முதல்வர் பதவியில் இருந்து நீக்குவதற்கு கர்நாடகத்தில் உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியினர் முயற்சித்துவருவதாகவும் கூறப்படுகிறது. (க)

### தளபதிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யடிக்கலாம் என்று எதிர்பார்க்கமுடியாது.

தளபதிகள் இடமாற்றப்பட்டபோதும், புலிகள் மாறவில்லை. அவர்கள் பலம் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். அரசினால் எதையும் சாதிக்க முடியாது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாடு தளபதியாக டென்சில் கொப்பேகடுவவும், வவுனியாவுக்கு ஜெரி சில்வாவும். விஜய விமலரட்ண கிழக்கு மாகாணத்திற்கும் இராணுவத் தளபதிகளாக அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையின் ஆரம்பத்தில் புலிகள் நடத்திய இரு அதிரடித் தாக்குதல்களில் இராணுவத்தினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்தனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் பொதுமக்களின் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனை முழுமையாக தனதுகைக்குள்கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்த கூட்டுப்படைத் தலைமையகம் இந்த இராணுவ நடவடிக்கை பற்றிய விபரம் எதனையும் வெளியிடவில்லை.

விடுதலைப்புலிகள் இடைவிடாது நடத்திவரும் தாக்குதல்களை சமாளிக்கமுடியாது இராணுவத்தினரின் முயற்சிகள் யாவும் தடைப்பட்டு நிற்கின்றன.

### படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் ரோந்து வந்த படையினர் வீதியில் சென்று கொண்டிருந்த பொதுமக்களை நோக்கி கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானதுடன், ஒருவர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் இறந்தவரின் சடலம் இராணுவத்தினரால் இழுத்துச் செல்லப்பட்டு பற்றையொன்றில் வீசப்பட்டிருந்தது. [ரி]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81